தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

# தமிழ்க் கதிர்

மாணவர் சஞ்சிகை – டிசம்பர் 2025 | www.tsch.org.au



## தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

# பதிப்பாசிரியர் செய்தி...

ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் மாணவச் செல்வங்களின் பங்களிப்போடு 2025 ஆம் ஆண்டு நிறைவில் தமிழ்க்கதிர் சஞ்சிகையை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

இந்தச் சஞ்சிகையிலும் மாணவர்கள் தம் சித்திரத் திறமையோடு, பல்வேறு பரிமாணங்களில் சுவையான பல எழுத்தாக்கங்களை மிகக் குறுகிய காலத்தில் எழுதிப் பகிர்ந்திருக்கிறார்கள்.

தாம் கற்ற தமிழ்க் கல்வியை இவ்வாறான ஆக்க இலக்கியத் திறனுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் பாங்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

சஞ்சிகைக்கான ஆக்கங்களை எழுதிய மாணவர்களுக்கும், அவர்தம் பெற்றோருக்கும், ஆசியர்கள் மற்றும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய அதிபர், தலைவர் மற்றும் நிர்வாகத்தினருக்கும் நன்றியறிதலைப் பகிர்ந்து கொள்கிறேன்.

க.பிரபாகர்
பதிப்பாசிரியர்
ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம்



# தலைவரின் செய்தி...

''எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்'' என்ற ஔவையாரின் வாக்கு, தமிழ் எழுத்தின் முக்கியத்தை எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் கதிர் மின்- சஞ்சிகையின் மூன்றாம் பதிப்பின் ஊடாக உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

புலம் பெயர் தேசத்தில் எமது தமிழ் மொழியையம், கலாசாரத்தையும் பேணிப் பாதுகாப்பதில் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டி உள்ளது. அந்த சவால்களை எதிர் கொண்டு எமது மொழியை வளர்ப்பதற்கு எழுத்து முக்கிய ஆயுதமாக இருக்கின்றது. கதிர் சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுத்துக்களாகவும், சித்திர ஓவியங்களாகவும் தரும் மாணவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது.

சின்னஞ்சிறு மழலைகள் தங்கள் எண்ணங்களை வண்ண வண்ண ஓவியங்களாக வெளிப்படுத்துகிறார்கள். ஏனைய மாணவர்கள் தமது வயதுக்கேற்ற தலைப்புகளை தெரிவு செய்து வசனங்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதுகிறார்கள்.

மாணவர்கள் ஆக்கங்களை உருவாக்குவதால் அவர்க ளுடைய சிந்தனை ஆற்றல், வாசிப்புத்திறன், சொல்வள விருத்தி, கற்பனைத் திறன் போன்றவற்றை வளர்வளர்த்துக்கொள்கிறார்கள்.

தொழில் நுட்ப மாறுதல்களுக்கு ஏற்ப இவ்வாறான மின்னூடகப் பதிப்புகள் எதிர்காலத்துக்கும் சேமிக்கப்படும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களை தந்து உதவும் மாணவர்கள், அவர்களை உற்சாகப்படுத்தும் பெற்றோர்கள், நெறிப்படுத்தும் ஆசிரியர்கள், அதிபர், நிர்வாக குழு உறுப்பினர்கள், தொண்டர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பாராட்டுக்குஉரியவர்கள்.


இந்த இலத்திரனியல் சஞ்சிகையை வடிவமைத்து வெளியிடுவதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டுவரும் திரு. க. பிரபாகர், அவர்களுடைய சேவைஅளப்பெரியது.

எமது கதிர் சஞ்சிகை பல்லாண்டு ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றி நடை போட உளமார வாழ்த்துகிறேன்.

**நன்றி...**

**தலைவர் - 2025**
**இளங்கோ சுரேந்திரன்**
**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**




செ. ஆரியென்
பாவர் முன்பள்ளி




அகில்



PRESCHOOL


பாலர் முன்பள்ளி

துருவ்– பாலர் முன்பள்ளி



தமிழ் இசைக்கருவி



அதியன்
UKG


நிலா நிலா வாவா
நில்லாமல் ஓடிவா
மலை மேலே ஏறிவா
மல்லிகைப் பூ கொண்டுவா
UKG


மயிலன்
LKG-B

ப்ரக்ருதி





# பச்சைக் கிளி




பச்சைக் கிளியே வா வா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா

Shankaran - Sundaralingam UKG

தமிழ்

பி. தனுஜாபிரதாப்குமார்
U.K.G

தமிழ் கல்வி நிலையம், ஹோம்புஷ்



ஒரு காட்டுக்குள்ளை கரடி ஒன்று இருந்தது.
அது வீடு கட்டலாம் என்று யோசித்தது.
அங்கு நிம்மதியாக வாழ்ந்து வந்தது.

# நீதிக்கதை

ஒரு நாள் மாலை ஒரு பாட்டி தன் பேரனுக்கு
நீதிக்கதைகள் சொல்லிக் கொண்டிருந்தார். அதாவது,
"நமக்குள் எப்போழுதும் இரு விலங்கு போன்ற
குணங்களுடன் சண்டை நடந்து கொண்டிருக்கிறது
ஒன்று
மிகவும் நல்ல பண்பு, பாசம், நேசம், மனிதத்தன்மை,
உண்மை போன்ற குணங்கள்.
மற்றொன்று
கோபம், பொறாமை, பொய், தான் மட்டுமே எல்லாமும்
எனப்படும் ஈகோ போன்ற குணங்கள் என்று
கூறினார்.
அப்போது சிறுவன் கேட்டான்
"இதில் எந்த விலங்கு ஜெயிக்கும்?" என்று
பாட்டி சொன்னார்....
"நீ எதற்கு உணவு கொடுக்கிறாயோ அதுவே
ஜெயிக்கும்" என்றார்
நாம் எப்போதும் நல்லவற்றையே நினைப்போம்,
செய்வோம், நல்லதே நடக்கும்.

வி.தேஜஷ் ஹரிஹரன் கூட்டு வகுப்பு


**வி.தேஜஷ் ஹரிஹரன் – கூட்டு வகுப்பு**

## உடல் உறுப்புகள்




ஆக்கம்
ஹஷ்வின் சுபாகரன்
தரம் : 01

## Rajarajeshwari MK - Year 1



பிரணவ்.பா.சா Yr- 1A
PRANAV BALAJI SANTHI PRIYA

# என் பள்ளி

1. என் பள்ளியின் பெயர் தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்.
2. என் பள்ளி அழகானது.
3. என் ஆசிரியர்கள் நன்றாக பாடம் சொல்லித் தருவார்கள்.
4. என் நண்பர்களுடன் பள்ளியில் விளையாடுவேன்.
5. என் பள்ளி எனக்கு மிகவும் பிடிக்கும்.
6. நாங்கள் பாடல்கள் பாடுவோம்.
7. வகுப்பு அறை சுத்தமாக இருக்கும்.
8. நாங்கள் ஒன்றாக படிப்போம்.
9. என் பள்ளி மகிழ்ச்சியும் அன்பும் சேரும் இடம்.

# தினமும் செய்யும் செயல்கள்

* எனது குடும்பத்தில் நான் செய்யும் செயல்கள்.

அப்பா அம்மாவின் சொற்படி நடத்தல், எடுத்த பொருட்களை ஒழுங்காக வைத்தல், சிறு சிறு உதவிகள் செய்தல் என்பனவாகும். இவையன்றி எனது பாடங்களைப் படிப்பதும் முக்கிய செயலாகும். மற்றும் அண்ணா, தம்பி, அம்மம்மாவுடன் அன்பாக நடத்தல், மாலையில் மரங்களுக்குத் தண்ணீர் விடல், சங்கீதம், நடனம், வீணை ஆகியவற்றைப் பயிலல். இரவானதும் குளித்துவிட்டு கடவுளை வணங்குவேன். பின்பு எல்லோருடனும் சேர்ந்து சாப்பிடுவேன். பின்பு அன்றைய தினம் வகுப்பில் நடந்தவற்றைக் கூறிவிட்டு நித்திரைக்குப் போவேன்.

* வகுப்பில் நான் தினமும் செய்யும் செயல்கள்.


சரியான நேரத்திற்குப் பள்ளிக்கூடம் செல்லல், வகுப்பறையை சுத்தமாக வைத்திருத்தல், மற்ற மாணவர்களுடன் அன்பாகப் பேசுதல், தேவையான உதவி செய்தல், பள்ளிக்கூட ஒழுங்குவிதியின் படி நடத்தல் ஆகியன எனது தினமும் செய்யும் செயல்களாகும்.

செ. ரேவதிகா
ஆண்டு-2B


ஆஸ்திரேலியாவில் தமிழ்!
வாழ்க தமிழ்
கவின் - 38

# தீபாவளி

தீபாவளி இந்துக்களின் பண்டிகை ஆகும். இருள் அகன்று வெளிச்சம் வருவது போல், தீமை நீங்கி நன்மை பெருகுகின்ற நாளாகக் கொண்டாடப்படுகிறது. இது ஐப்பசி அல்லது கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படுகின்றது. இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் விடுமுறையோடு கூடிய தினமாகக் கொண்டாடப்படுகிறது. வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் இதனை தமது கலாசார தினமாக பாடசாலைகளிலும் வேலைத்தளங்களிலும் கொண்டாடுகின்றார்கள். வீடுகளில் மாவினால் கோலம் போட்டு விளக்கு ஏற்றி, பலகாரபண்டங்கள் பரிமாறுவார்கள். சிறுவர்கள் புத்தாடை அணிந்து, பட்டாசு கொளுத்தி, மகிழ்வார்கள். ஒவ்வொரு விளக்கும் நம்பிக்கையின் குறியீடாகி அனைவரது உள்ளத்திலும் பிரகாசிக்க வேண்டும்.




ஹர்ஷினி பவுன்
ஆண்டு 3N
2025

## எல்லா உயிர்களுக்கும் அன்பு செலுத்துவோம்

இந்த உலகில் பல உயிரினங்கள் வாழ்கின்றன.
விலங்குகள், பறவைகள், ஊர்வன எனப் பல வகையான
உயிரினங்கள் உள்ளன. நாம் எல்லா
உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்.
உயிரினங்களுக்கு தீமை செய்யக்கூடாது.
பல உயிரினங்கள் நமக்கு நன்மை செய்கின்றன.
நாய் நன்றியுடன் நமது வீட்டைக் காவல் செய்கிறது.
பசு மற்றும் ஆடு சுவையான பால் தரும். கோழி மற்றும்
வாத்து நமக்கு முட்டை தரும். கிளி, மைனா போன்ற
பறவைகளை நாம் வளர்க்கிறோம். நாம்
செல்லப்பிராணிகளை மிருகவைத்தியரிடம் கொண்டு
சென்று தடுப்பூசி கொடுக்கவேண்டும். இதன் மூலம்
அவற்றிற்கு நோய்கள் வராமல் தடுக்கலாம். இறைவன்
இவ்வுலகில் மனிதர்களுடன் பல விதமான
உயிரினங்களை படைத்தார். நாம் இவற்றுடன்
ஒன்றாக கூடி வாழ வேண்டும்.

நிக்ஷா நிமலன்
ஆண்டு 4






# அவுஸ்திரேலியாவின் காலநிலை


1. அவுஸ்திரேலியாவைப் நான்கு வகையான கால நிலைகள் உள்ளன.
2. அவை கோடை காலம், இலையுதிர் காலம், குளிர் காலம், வசந்த காலம் ஆகும்.
3. கோடை காலத்தில் வெக்கையாக இருக்கும்.
4. கோடை காலம் மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் வரும்.
5. இலையுதிர் காலத்தில் மரத்தின் இலைகள் உதிரும்.
6. இலையுதிர் காலம் பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் வரும்.
7. குளிர் காலத்தில் குளிராக இருக்கும்.
8. குளிர் காலம் ஆனி, ஆடி, அவணி ஆகிய மாதங்களில் வரும்.
9. வசந்த காலத்தில் பூக்கள் பூக்கும்.
10. வசந்த காலத்தில பூக்கள் அழகாக இருக்கு
11. வசந்த காலம் புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வரும்.

ஆக்கம்
சஜ்வினி சுபாகரன்
தரம் 4

கார்த்திக்
ஆண்டு 4

# தைப்பொங்கல்

தைப்பொங்கல் ஒரு தமிழர் பண்டிகை ஆகும்.
தைப் பொங்கல் தை மாதத்தில் முதலாம் திகதி கொண்டாடப்படும்.
இது சூரியனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை.
இது உழவர் பண்டிகை ஆகும்.
பயிர்கள் வளர்வதற்கு சூரிய ஒளியும், மழையும் முக்கியம்.
சூரியன் எமக்கு ஒளியையும், மழையையும் தருவதால்
தைப்பொங்கல் அன்று நன்றி செலுத்துவோம்.
அன்று புதிதாக அறுவடை செய்த நெல்லில் இருந்து
அரிசி எடுத்து பொங்கல் செய்து சூரியனுக்கு படைத்து
நன்றி செலுத்துவோம்.
நாங்கள் புதிய ஆடைகள் அணிந்து குடும்பமாக தைப்பொங்கல்
கொண்டாடுவோம்.



# எனது இத்தாலிப் பயணம்

நான் அண்மையில் இத்தாலிக்கு சென்று வந்தேன். நான் சிட்னியிலிருந்து சிங்கப்பூர் சென்றேன். அங்கு இறங்கி சில மணி நேரத்துக்குப் பின்னர் இத்தாலிக்கு சென்றேன். அது ஒரு பெரிய விமான நிலையம். அங்கிருந்து வாடகைக்காரில் டொலமைற்ஸ் என்ற இடத்துக்கு சென்றேன். அங்கே பனியில் சறுக்கி விளையாடினேன். அங்கிருந்து பேக்கோலோ போனேன். நான் ஒரு அழகிய இடத்தைப் பார்த்தேன். பின்னர் நான் காற்பந்து போட்டியில் விளையாடினேன். திறமையாளர்களோடு விளையாடினேன். அது எனக்கு மிகவும் சவாலாக இருந்தது.

போட்டி முடிந்தபின் நாம் இத்தாலியின் பல முக்கிய இடங்களை பார்வையிட்டோம். முதலில் Leaning Tower of Pisa பார்வையிட்டோம். அங்கிருந்து நாங்கள் Rome நகரத்திற்கு சென்றோம். உலகில் புகழ்பெற்ற Colosseum ஐத் பார்த்தோம். அது மிகவும் பழமையான கட்டடம். அங்கு பழைய காலத்தில் வீரர்கள் போராடிய இடமாகும். இதைப் பார்த்தது எனக்கு ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. இந்த இத்தாலிப் பயணம் எனக்கு பல புதிய விடையங்களை கற்றுத் தந்தது. இது என் வாழ்க்கையில் ஒரு சிறந்த அனுபவமாகும்.

- கணேஷ் விக்னராஜன், ஆண்டு 4



# மெல்பேர்ன் நகரில் நடைபெற்ற தேசியப் போட்டி பற்றிய எனது அனுபவம்.

சிட்னி நகரில் நடைபெற்ற பேச்சுப் போட்டியிலும், திருக்குறள் போட்டியிலும் நான் தேசியப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டேன். அதனால் ஐப்பசி மாதம் இரண்டாம் திகதி எனது குடும்பத்தினருடன், மெல்பேர்ன் நகருக்குச் சென்றேன்.

எனது அப்பா எட்டரை மணி நேரம் சிட்னியிலிருந்து வண்டியை ஓட்டினார். நான் வண்டியிலிருந்து அடர்ந்த மரங்களையும், குதிரைகள், பசுக்கள் மேய்வதையும், கங்காருக்களையும், கோலாக்களையும் பார்த்து ரசித்தேன். அந்தக் காட்சிகளை என்னால் மறக்க முடியாது. மெல்பேர்ன் நகரை அடைந்ததும் அங்கு எனது ஜோபிகா மாமி வீட்டில் தங்கினோம்.

நான்காம் திகதி சனிக்கிழமை தேசியப்போட்டி ஒரு பாடசாலையில் நடைபெற்றது. பல மாநிலங்களிலிருந்தும் பல மாணவர்கள் தேசியப் போட்டிக்கு வந்தார்கள். போட்டி மிகவும் சவாலாக இருந்தது. அதனால் நான் திறமையாகச் செய்தேன். திருக்குறள் போட்டி செய்யும்போது எனது முறை இருபத்தி மூன்றாவது ஆக இருந்ததால் நான் காத்திருந்து களைத்தும் போனேன். ஆனால் பேச்சுப்போட்டியில் எனது இரண்டாவதாக பேசியது மகிழ்ச்சியாக இருந்தது. அதனால் நன்றாகச் செய்தேன். தேசியப் போட்டியில் பங்குபற்றியது எனக்கு மிகவும் பெருமையாகவும், உற்சாகமாகவும் இருந்தது.

எனக்கு எனது மெல்பேர்ன் நகர் பயணம் மிகவும் பிடித்திருந்தது. அடுத்த வருடமும் போக ஆவலாக இருக்கிறேன்.

ஸைலா.முரளிகிருஷ்ணா ஆண்டு 4 ♡



# எனது பொழுதுபோக்கு



எனக்கு துவிச்சக்கரவண்டி ஓட்டுவதற்கு மிகவும் விருப்பம். எனக்கு நான்கு வயதாக இருக்கும்போது துவிச்சக்கரவண்டி ஓட்டக் கற்றுக்கொண்டேன். எனது தாத்தா எனக்கு இதை ஓட்டக் கற்றுத்தந்தார். நானும் அவரும் விடுமுறைநாட்களில் அருகில் உள்ள பூங்காவுக்குச் செல்வோம். அங்கு அவர் மிகவும் பொறுமையாக எனக்கு துவிச்சக்கரவண்டி ஓட்டக் கற்றுத்தருவார். ஆரம்பத்தில் நான் பலமுறை சமநிலை இழந்து, நிலத்தில் விழுந்ததுண்டு. ஆயினும், விடாமுயற்சியுடன் பழகினேன். அத்தோடு எனது தாத்தாவும் என்னை மீண்டும் எழுந்து ஓடுவதற்கு உற்சாகப்படுத்தினார். என்னால் இப்போது மிகவும் நன்றாக துவிச்சக்கரவண்டி ஓட்டமுடியும். இது எனக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கும்கூட!

ஆக்கம்: பிரீத்தி ஜெகன்
ஆண்டு: 5


## இயற்கையைக் காப்போம்

இறைவன் மனித குலத்திற்கு அளித்த மிகப் பெரிய பரிசு இயற்கை ஆகும். மனித இனம் மட்டும் அல்லாமல் அனைத்து உயிர்களும் வாழ இயற்கை அவசியம். இயற்கை வளம் நிறைந்த இந்த பூமியைப் பேணி பாதுகாப்பது நமது கடமையாகும்.

இரசாயனக் கழிவுகள் தவிர்த்து மண் வளம் காப்போம். மரங்கள் வளர்த்து மழை வளம் காப்போம். வளர்ச்சி என்ற பெயரில் காடுகள் அழிக்கப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். மழை நீர் சேமிப்பை உறுதி படுத்த வேண்டும்.

"இயற்கையே இறை"

மே.கி. பகவதிராசன், 6ஆம் வகு


SAVE NATURE - இயற்கையைக் காப்போம்

# கல்வி

மனிதனின் வாழ்க்கைக்கு உணவு, உடை, உறைவிடம் முக்கியமானவை. அதேபோல் கல்வி மிக முக்கியமானது. 'கல்வியே கண்' என்பதைப் போல் கல்வி எல்லோருக்கும் அவசியம். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' இதனையே ஔவைப் பாட்டி கூறினார். 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்றும் ஔவைப்பாட்டி மூதுரையில் கூறினார்.

முன்னைய காலத்தில் ஆசிரியரிடம் கற்பது கல்வி. தமிழ் மக்கள் ஆரம்பத்தில் ஆசிரியர்களின் வீட்டுக்குப்போய் அவர்களுக்குத் தொண்டு செய்தார்கள். அங்கேயே இருந்து பாடம் படித்தார்கள். இதுவே குருகுலக்கல்வி ஆகும். காலப்போக்கில் திண்ணையில்கல்வி, பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பன தோற்றம் பெற்றன. இன்று நாம், பள்ளிக்கூடம், நூலகம், இணையத் தளங்கள் ஊடாகக்கல்வி கற்கிறோம்.

கல்வி கற்பதனால் மதிப்பும், மரியாதையுடனும் வாழலாம். நல்ல வழியில் வாய்ப்புக்களைப் பெறலாம். பொருளாதாரம் மேம்படும். வாழ்க்கை தரம் உயரும். இதனால் நாம் சிறு வயதில் இருந்தே கற்க வேண்டும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்ற முதுமொழி எடுத்துக் காட்டுகின்றது. 'காலை எழுந்தவுடன் படிப்பு, மாலை முழுவதும் நல்ல விளையாட்டு' என்று பாரதியார் பாடலுக்கு அமைய தினமும் படிப்போம். ஆடு மாடு இரைமீட்பது போல தமிழ் கற்பதனால் கற்றவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம்.




ஹரிணி பவன்
ஆண்டு 6
2025

# அன்சாக் நாள்

*துளசி ஐசிதரன்.* ( 8 ஆம் வகுப்பு )

நாட்காட்டியில் உள்ள அனைத்து நாட்களிலும், சத்திரை 25 ஆம் திகதி நினைவு கூரப்படும் அன்சாக் நாள், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் மிகவும் நினைவுகூரப்படும் நாளாகும்.

அன்னாக் நாள் என்பது தங்கள் நாட்டின் அமைதிக்காத தங்கள் குன்னுயிரை தியாமம் செய்த ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து இராணுவப் படைகளின் உறுப்பினர்களை நாம் கௌரவிக்கும் நிகழ்வாகும்.

பாடசாலைகள், சமூகங்கள் மற்றும் ஊடகங்கள் இளைய நிலைமுறையினர் அன்சாக நாள்ன் முக்கியத்துவத்தை நினையில் கொன்வனற கற்றுக்கொடுக்கின்றன.

"நாம் மறந்துவிடக் கூடாது" என்பது அன்சாத் நாள்த நம் நாட்டிற்காகப் போராடிய மக்களை மதிக்கவும் நினைவில் கொள்ளவும் நன்கு அறியப்பட்ட சொற்றொடர்.

நமது நாட்டைப் பாதுகாக்கப் பாடுபட்டவர்களின் துணிச்சலையும் தியாகங்களையும் எப்போதும் மதிக்க வேண்டும் என்பதை இது நமக்கு நிணைவூட்டுகிறது.

என் பாடசாலையில், நாங்கள் சிவப்பு பாப்பிகளை அணிந்துகொள்கிறோம், ஒருநினைவு விழாவில் கலந்து கொள்கிறோம், மேலும் அனைத்து வீரர்களின் தியாகங்களுக்கும் நன்றி தெரிவிக்க ஒரு நிமிடம் ஓய்வெடுக்கிறோம்.

"நாப் மறந்துவிடக் கூடாது" என்று சொல்வயின் மூடைம் அவற்றை எப்போலும் நினைவில் வர்திருபத உறுதியளிக்கிறோம்.

என் பாடசாலையில், நாங்கள் சிவப்பு பாப்பிகளை அணிந்துகொள்கிறோம், ஒருநினைவு விழாவில் கலந்து கொள்கிறோம், மேலும் அனைத்து வீரர்களின் தியாகங்களுக்கும் நன்றி தெரிவிக்க ஒரு நிமிடம் ஓய்வெடுக்கிறோம்.

"நாப் மறந்துவிடக் கூடாது" என்று சொல்வயின் மூடைம் அவற்றை எப்போலும் நினைவில் வர்திருபத உறுதியளிக்கிறோம்.



# நி.ச.வே மாநிலத்தில் தமிழ்மொழி தமிழ்க் கலாசார வளர்ச்சி




**அவுஸ்திரேலியா** ஒரு பல்கலாசார நாடு. இங்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் பல இனத்தைச் சேர்ந்த மக்கள் குடியேறி வாழ்கிறார்கள். அது போல் தமிழர்களாகிய நாமும் பாதுகாப்பு வேலை வாய்ப்பு மேற்படிப்பு போன்ற காரணங்களுக்காக எமது தாய்நாட்டை விட்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்தோம். புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெற்றோர்கள் எமது மொழியையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியுடன் உழைத்தனர்.

அவுஸ்திரேலிய அரசு தாய்மொழியையும் கலாசாரத்தையும் பின்பற்றுவதற்குத் தந்த அனுமதியையும் ஆதரவையும் கொண்டு தமிழ்ப் பாடசாலைகளை நி.ச.வே மாநிலத்தில் அமைத்தனர். தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ்மொழியைக் கற்பித்தும் எமது கலாசார நிகழ்வுகளை நடாத்தியும் வருகிறார்கள். நாம் வாழும் நி.ச.வே மாநிலத்தில் அரசாங்கம் இன ஒற்றுமை நாள் பல்லின கலாசார நாள் போன்றவற்றை பாடசாலைகளில் நடத்த உதவுகிறது.. இது தமிழர்களாகிய எமக்கு எமது மொழியையும் கலாசாரத்தையும் வளர்ப்பதற்குப் பெரும் உதவியாக இருக்கின்றது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் இன்று ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி தமிழ்மொழியை இளம் சந்ததியினரான நமக்கு ஊட்டுகின்றன. அமரர் வேந்தனார் இளங்கோ போன்ற பல தமிழ் ஆர்வலர்களின் அயராத முயற்சியினால் நி.ச.வே மாநிலத்தில் உயர்தரச் சான்றிதழ் பரீட்சைக்குத் தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுப்பதற்கு நி.ச.வே கல்வி அமைச்சு 1999 இல் அனுமதி அளித்தது. இதனால் பல்வேறு மாணவர்கள் தமிழ் மொழியை தொடர்ந்து கற்பதற்கும் உயர்தரம் வரை கற்று பரீட்சை எடுப்பதற்கும் உதவியாக இருக்கிறது.



# நி.ச.வே மாநிலத்தில் தமிழ்மொழி தமிழ்க் கலாசார வளர்ச்சி

இவ்வாறு உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக தெரிவு செய்து சித்தியடைந்த மாணவர்களில் பலர் இன்று இளம் ஆசிரியர்களாக தமிழ்ப் பாடசாலை களில் சேவை செய்கிறார்கள். இவர்களின் இந்த முயற்சி பாராடுவதற்குரியது. அத்துடன் இளை யோர் தமிழ் கற்க ஊக்கத்தையும் இது தருகிறது.

நி.ச.வே மாநிலத்தில் தமிழ்மொழியையும் கலா சாரத்தையும் பேணிவளர்ப்பதுக்கு பல்வேறு நிறுவனங்கள் வசதியும் வாய்ப்பும் வழங்குகின்ற ன. அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் சிட்னி சைவ மன்றம் தமிழ் இலக்கிய கலை மன் றம் கம்பன் கழகம் தமிழ் வளர்ச்சி மன்றம் தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பு ஆகியன தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் வளர்ப்பதுக்கு உதவி செய்கின்றன. எமது மாநிலத்தில் நடத்தப் படுகின்ற பல்வேறு போட்டிகளில் பங்குபற்றுவ தாலும் கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதாலும் தமிழ்விழாக்களைப் பார்வையிடுவதாலும் நாம் எமது தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் அறிந்து கொள்வதற்கும் பின்பற்றுவதற்கும் பெரும் உதவியாக அமைகின்றது.

நி.ச.வே மாநிலத்தில் ஆஸ்திரேலிய தமிழ் ஒலி பரப்பு கூட்டுத்தாபனம் தாயகம் வானொலி தமிழ் முழக்கம் வானொலி எஸ்பிஎஸ் (SBS) வானொலி போன்ற வானொலி நிறுவனங்கள் தமிழை வளர்க் கவும் பேணவும் உதவுவதோடு இளையோரின் பங்களிப்புக்கும் வாய்ப்புக் கொடுக்கின்றன. இங்கு மேடையேற்றப்படுகின்ற நாடகங்கள் நடன நிகழ்வு கள் இசைவிருந்துகள் இங்கு தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்கள் ஆகியனவும் தமிழ் வளர்ப்பதில் காத்திரமான பங்காற்றுகின்றன என்று கூறலாம்.

**விசாகன் சுரேந்திரன்**



அன்பு
நண்பன் திலீப்புக்கு,

நான் நல்ல சுகமாக இருக்கிறேன் உங்கள் சுகம் எப்படி? கடந்த வாரம் நான் எனது அத்தையின் பூர்வீக கிராமமான திருகோணமலையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பினேன். இது நான் இலங்கைக்கு சென்ற இரண்டாவது பயணம் ஆகும். இதற்கு முன் 2018 ஆம் ஆண்டிடு திருகோணமலைக்குச் சென்றேன். அப்போது நான் பார்த்த திருகோணமலைக்கும், இப்போது பார்த்த திருகோணமலைக்கும் இடையே பல வித்தியாசமான விடயங்களை அவதானித்தேன்.

இப்பயணத்தின் போது நான் லீலா மாமியின் வீட்டில் தங்கினேன். அவருடைய மகனான டிலன் முன்னர் பார்த்ததை விட உயரமாக வளர்ந்து இருந்ததைக் கண்டு வியந்தேன். ஆனாலும் அவருடைய தோற்றத்திலிருந்த மாற்றங்களை விட அவர் பின்பற்றுகின்ற பழக்கவழக்கங்களில் இருக்கும் வேறுபாடுகளே அதிகமாக இருந்தன.

2018 ஆம் ஆண்டிடு நான் திருகோணமலைக்குச் சென்றபோது டிலன் அதிகாலையில் எழுந்து, அவருடைய பாடசாலை படிப்புகளை முடித்துவிட்டு தினமும் கோணேசர் கோயிலுக்குச் சென்று வந்தார். ஆனால் இப்போது அவர் காலை எழுந்ததும் அவருடைய அறையை விட்டு வெளியில் வராமல், ஒரு மணி நேரத்திற்கு திறன் பேசியல் விளையாடிய பின்னரே வெளியில் வருகிறார். இதனால் தான் அவர் கண்ணாடி அணிகிறார் என்று நான் உணர்ந்தேன். டிலனுடைய மொழிப் பாவனையும் பெரும் மாற்றம் அடைந்திருப்பதை நான் அவதானித்தேன். உதாரணமாக, நான் அவரை தமிழில் 'தம்பி' என்று அழைத்தபோது பதிலுக்கு அவர் என்னை 'ப்ரோ (Bro)' என்று ஆங்கிலத்தில் அழைத்தபோது பூர்வீக கிராமத்தில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் எவ்வளவு பலமாக இருக்கிறது என்று அறிந்து கொண்டேன். .

ஒவ்வொரு முறையும் நான் திருகோணமலைக்கு

# மாறிவரும் காலமும்

# மருவி வரும் மனித வாழ்வும்





வரும்போதும் அத்தையின் குலதெய்வக் கோயிலுக்குச் செல்வேன். 'மிதிவண்டி எங்கே இருக்கிறது அத்தை?' என்று நான் கேட்க, அவர் 'நாம் இப்போது மகிழூர்தியைத்தான் உபயோகிக்கின்றோம் தம்பி' என்று கூறினார். அவருடைய வாகனத் தரிப்பிடத்திற்குச் சென்ற போது ஒரு புதிய மின்சார மகிழூர்தி இருந்ததை அவதானித்தேன். ஏழு வருடங்களில் இவ்வளவு மாற்றங்கள் எவ்வாறு நடந்திருக்கும்!! என்று நான் திகைத்துப் போய் நின்றேன். 'ம்ம்ம் 'என்ற மின்சார மகிழூர்தி இயந்திரத்தின் ஓசை என் காதில் விழுந்தது எனக்கு வியப்பை ஊட்டியது.

கோவிலுக்குச் சென்று அங்கு இருந்த நுட்பமான சிலைகளைப் பார்த்த போது மாற்றங்கள் ஏதும் பெரிதாகக் காண முடியவில்லை. ஆயினும், முன்னர் சாரை சாரையாக ஆயிரக்கணக்கான மக்கள் குலதெய்வக் கோவிலுக்கு தினமும் வந்து போனார்கள். ஆனால், இப்போது ஒரு ஊசி விழுந்தால் கூட கேட்க கூடிய அளவிற்கு கோயில் அமைதியாக இருந்தது. கோவிலுக்கு வந்த சில ஆண்களும் வேட்டி அணியவில்லை. அவர்கள் காற்சட்டைகள் அணிந்தது வந்தது எனக்கு மேலைத்தேய உடைகளின் ஆதிக்கத்தை நினைவூட்டியது.

எனது பயணத்தின் கடைசி நாள், பெரிய மச்சானின் வீட்டுக்கு எனது பெற்றோருடன் சென்றேன். அங்கு சென்றதும் மச்சானும் அவரது மனைவியும் எங்களை அன்புடன், இன்சொல் பேசி வரவேற்று உபசரித்தார்கள். உணவு உண்ணும் நேரம் வந்ததும் பல கறிகள் நிறைந்த பாத்திரங்களை எங்கள் முன் வைத்தார்கள். வாழை இலைகள் இட்டு, குடும்பமாக எங்களுடன் சேர்ந்து உணவருந்தினார்கள்.

பலவகையான ருசியான உணவுகள் என் வயிற்றுக்கு விருந்தாக அமைந்தன. இதுதான் தமிழ் பாரம்பரிய உணவு என்று நான் நினைத்தவாறு உணவை சுவைத்து சாப்பிட்டேன். நான் கண்ட பல மாற்றங்கள் இடையே இது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. 'செல் விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருப்பான் நல் விருந்து வானத்தவர்க்கு' என்பதைப் போல அவர்களின் உபசரிப்பு அவர்களை வானத்தவர்களாலும் போற்றும் வகையில் இருந்தது என்று அவர்களைப் பாராட்டினேன்.

இந்தப் பயணத்தின் ஊடாக என்து அத்தையின் பூர்வீக கிராமத்தில் வாழும் மக்களின் மொழி, தொழில்நுட்ப, பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட பல மாற்றங்களை அவதானிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆனாலும் இறுதியில் எங்கள் தமிழ் விழுமியங்களான, மரியாதை செலுத்துதல், விருந்தோம்பல் போன்றவை காலத்தையும் தாண்டி நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கை என்னுள் ஏற்பட்டது.

நீங்களும் உங்களுடைய பூர்வீகக் கிராமத்திற்கு சென்று, அங்கு ஏற்பட்ட மாற்றங்களால் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை அறிந்து கொள்ளஆவலாகஉள்ளேன்.

உங்கள் சுகத்திற்கு
மின்னஞ்சலைஅனுப்புங்கள்

இப்படிக்கு,
அன்பு நண்பன்
குலோத்துங்கன்

**ஆக்கம்: சிவலிங்கேசர் சிவகுமார்**
**( ஆண்டு 12 )**





# தமிழ்க் குடும்பங்களில் மாறிவரும் பெண்களின் பங்கு

சமீபத்தில் எனது பாட்டி இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியா வந்திருந்தார். அவர் நானும் என் அம்மாவும் செய்யும் சிறிய தினசரி நடவடிக் கைகளை பார்த்து, அதில் தவறுகளை மட்டும் கண்டறிந்து, அதை சுட்டிக்காட்டி வந்தார். இது என் மனதிற்கு வருத்தமாக இருந்தது. எனவே, ஒரு நாள் அவரிடம் நான் அதைப் பற்றி விசாரித் தேன். அவர் தான் வளரும் பொழுது பெண்களின் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது என்பதை பற்றி என்னிடம் பகிர்ந்து கொண்டார். அதைக் கேட்ட பின்பு நான் இப்பொழுது பெண்களின் வாழ்க்கை முறை எவ்வாறு வித்தியாசமாக மாறி யுள்ளது என்றதை உணர்ந்தேன். ஒருமுறை இந்த மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்தவுடன், நான் என்னை மிகவும் அதிர்ஷ்டசாலியாகக் கருதி னேன். என்னுள் நன்றியுணர்வும் நிறைந்தது.

பாட்டி, அம்மா வேலைக்கு செல்வது ஏன் அவ ருக்கு விருப்பமில்லை என்பதைப் பற்றி முதல் கூறினார். முன்பு, பெண்கள் இளம் வயதிலேயே திருமண வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டு, கல்வி வாழ்க்கையில் இருந்து வலுக்கட்டாயமாக பிரிக்கப்பட்டார்கள். அவர்கள் பெரும்பாலும்



வீட்டுவேலை, குடும்பத்தினர், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை பராமரிப்பது என்ற பொறுப்புகளில் ஈடுபட்டார்கள். இதனால் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை முழுவதாக புறக்கணிக்கப்பட்டது. அவர்களுக்கு பிடித்த வேலை அல்லது படிப்பைப் படிக்க முடியாத நிலையாக இருந்தது. அதற்கு ஏற்ப, சமூகத்திலும் பெண்களின் திறமைக்கான அங்கீகாரம் குறைவாகவே இருந்தது. அவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளும் குறைவாகக் கிடைத்தது. இதற்குக் காரணம், ஆண்கள் தான் நீண்ட நேரம் வேலை செய்து, நிரந்தரமாக அந்த குறிப்பிட்ட வேலையில் நீடிப்பார்கள் என்ற சமூக எதிர்பார்ப்பும் நிலையுமே ஆகும். மேலும், அப்பொழுது இடம்பெயர்தல் பொரும்பாலும் நிகழவில்லை. அதனால், அவர்களால் மற்ற முன்னேறிய நாடுகளுக்கு சென்றும் வேலை பார்க்க முடியவில்லை. அவர்களின் பொழுதுபோக்கும் வீட்டில் இருந்தே செய்யக்கூடிய செயல்களாகத்தான் இருந்தது. பாட்டி இதுதான் அவரின் வாழ்க்கையாக இருந்தது என்றும், இந்தத் திடமான அமைப்பில் பெண்கள் அவர்களை பொருத்திக் கொள்ளத் தவறினால், அவர்கள் சமூகத்திலிருந்தும், குடும்பத்திலிருந்தும் கடுமையாக நிராகரிக்கப்பட்டனர் என்று கூறினார். அதைக் கேட்டபின், பாட்டியின் மேல் இருந்த கோபமும் வருத்தமும் மறைந்து, எனக்கு அவரைப் பார்க்க பாவமாக இருந்தது.

அவரின் பார்வையை புரிந்து கொண்ட பின்பு, நான் பாட்டியிடம் இன்றைய உலகம் எவ்வளவு மாறி உள்ளது என்று எடுத்து சொன்னேன். காலப்போக்கில் பெண்கள் அவர்களது சுதந்திரத்திற்காக குரல் எழுப்பினார்கள். நாடுகள் முன்னேற, பெண்களுக்கு கல்வி, வேலை, விளையாட்டு போன்ற அனைத்து துறைகளிலும் வாய்ப்பு வழங்க ஆரம்பித்தார்கள். மேலும், அவர்கள் மருத்துவம், பொறியியல், வணிகம், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் பெரிய சாதனைகள் செய்து பொருளாதாரத்தில் பெரிய பங்கு வகிக்க ஆரம்பித்தார்கள்.இது வீட்டில் இருக்கும் குடும்பத் தலைவர் என்று ஆண்களின் மேல் இருக்கும் பாரத்தை குறைத்து, பெண்களும் குடும்ப வருமானத்திற்கு பங்களிக்கும் நிலையை இன்று உருவாக்கியுள்ளது. இன்று பெண்களால் அவர்களது கனவை நோக்கி பயணம் செய்ய முடிகிறது; அவர்களால் ஒரு தனிப்பட்ட அடையாளத்தை உருவாக்க முடிகிறது; அவர்களால் தனக்காக வாழ முடிகிறது. வீட்டில் கணவன் மனைவி இருவரும் வேலை செய்வதால் வீட்டுவேலைகளை சமமாக பிரித்துக் கொள்ள முடிகிறது. மேலும் பெண்கள் சிறுவயதிலேயே திருமணம் செய்யும் எதிர்பார்ப்பு மாறி இப்பொழுது அவர்கள் முதல் பொருளாதார ரீதியாக சுதந்திரமான பின்பு, அவர்களுக்கு விருப்பம் இருந்தால் திருமணம் செய்யும் நிலை வந்துள்ளது. அந்த நோக்கத்தோடுதான் நானும் பயணம் செய்து கொண்டிருக்கிறேன் என்று பாட்டியுடன் பகிர்ந்தேன். இதற்கு அவர், அது தனக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும், சமூகம் இதைப்பற்றி என்ன சொல்லும் என்ற கவலைதான் இருக்கிறது என்றார். நான் பதிலுக்கு, இது என்னுடைய வாழ்க்கை என்று தலைநிமிர்ந்து சொன்னேன்.

இந்தக் கலந்துரையாடலுக்குப் பின்பு தான், நான் இந்த மாற்றம் தமிழ் சமுதாயத்தில் எவ்வளவு பெரிய மாற்றத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று உணர்ந்தேன். அன்று பெண்கள் வீட்டிலிருந்து அனைவரையும் பார்த்துக் கொண்டனர். ஆனால், இன்று வீட்டில்




இருவரும் வேலைக்கு செல்வதால் குழந்தைகளை பராமரிப்பு நிலையத்தில் சேர்ப்பதும், முதியோர்களை முதியோர் இல்லங்களில் சேர்ப்பதும் வழக்கமாக உள்ளது. இதனால் குடும்ப அமைப்பு மாறி, கூட்டுக் குடும்பமாக வாழும் பழக்கமும் மாறியுள்ளது. ஆனால், முன்பு போல பெண்கள் அமைதியானவர்களாக இருக்காமல், சுய நம்பிக்கை கொண்டவர்களாக உருவாகியுள்ளனர். என்னைப் போலவே! இந்த மாற்றம் ஆண்கள் பெண்களுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. அதே நேரம், இன்றைய உலகு இந்த சமநிலையை முழுவதாக அடையவில்லை. உதாரணமாக, பெண்களுக்கு சம்பளம் ஆண்களைவிடக் குறைவாகத் தான் கிடைக்கிறது. இன்றும் பெண்களின்மேல் சமூக எதிர்பார்ப்புக்கள், அவர்களின் வீட்டில் இருப்பவர்களாளேயே திணிக்கப்படுகிறது.

இந்த இரண்டு பார்வைகளைப் பற்றி மனம் விட்டு பேசியபின்பு, எனக்கு பாட்டியின் மன நிலையைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதே நேரம் பாட்டியாலும் எனது பார்வையை புரிந்து கொள்ள முடிந்தது. இந்தப் புரிதலினால் அவர், 'உனக்கு பிடித்த மாதிரி இரு' என்று எனக்கு ஊக்கமளித்தார். நான் பெரிய சாதனைகளை செய்வதற்கு வாழ்த்தினார்.

பெண்கள் மேலும் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்று நான் அவருக்குச் சொன்னேன். சமூகத்தில் பெண்கள் அடங்கிப் போகும் நபர்கள் அல்ல என்றும், நாங்களும் எங்களின் விருப்பத்தின்படி சாதிக்க போராடுவோம் என்று காட்டி, சமூகத்தின் பார்வையை மாற்ற வேண்டும் என்று நம்பிக்கையுடன் பாட்டியிடம் கூறினேன். அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பதற்கு, காலப்போக்கில் புரட்சியாளர்களின் பங்காலும், பெரும்போராட்டங்களின் விளைவாகவும் மாறியுள்ள பெண்களின் நிலை சான்றாக விளங்குகிறது!

**ஆக்கம்: வேதவர்ஷினி உதயகுமார்**
**( ஆண்டு 12 )**



# பூர்வீக கிராம அனுபவங்கள்



**அன்புள்ள நண்பிக்கு,**

நான் இங்கு ஆரோக்கியத்துடன் உள்ளேன், நீயும் அதே போல் இருக்கின்றாய் என நம்புகின்றேன். நான் உனக்கு மின்னஞ்சல் அனுப்புவதற்கான காரணம் என்னவென்றால், சென்ற மாதம் குடும்பத்துடன் எனது பூர்வீக கிராமமான கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள அக்கராயனுக்கு இரண்டாம் தடவையாக சென்றிருந்தேன். ஏழு வருடங்களுக்கு பிறகு என்பதால், அங்கு நிறைய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த மாற்றங்களை நான் உனக்கு சொல்ல விரும்புகின்றேன்.

முதலாவது முறை, நான் அங்கு சென்ற போது நிறைய நண்பர்கள், உறவினர்கள் வீட்டிற்கு வந்து நலம் விசாரித்தனர். பின்னர் நாங்கள் வீட்டிற்கு உள்ளே சென்றபோது அங்கு இருக்கும் எனது மாமாவின் பிள்ளைகள் மற்றும் பெரியம்மாவின் பிள்ளைகள் என்று எல்லோரும் ஓடிவந்து அரவணைத்தனர். இன்று பிள்ளைகளில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். ஏனென்றால், நான் முதல் தடவை வந்த போது எனது மற்றைய உறவினர்களின் பிள்ளைகளுக்கும் முதியோர்களுக்கும் இடையில் இருந்த மரியாதையை என்னால் உணர முடிந்தது. ஆனால் இந்த தடவை அந்த மரியாதை குறைந்து விட்டது என நினைக்கிறேன். ஏனெனில், இப்போது பிள்ளைகள் பெரியவர்களுக்கு முன் இருந்து காலுக்கு மேல் கால் போட்டு

அமர்ந்திருந்தனர், எல்லா நேரங்களிலும் கைத் தொலைபேசி பாவித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டனர்.

அடுத்ததாக, அங்கு முதல் முறை சென்ற போது அங்கிருக்கும் மக்கள், இளையோர்கள் எல்லோரும் நன்றாக துய்மையான இலங்கைத் தமிழில் உரையாடி இருந்தனர். எனக்கே ஆச்சரியமாகவும் பொறாமையாகவும் இருந்தது. ஆனால் இப்போதய சூழலில் இளையோர்கள் எல்லோரும் சமூக ஊடகங்களில் அதிகம் நேரம் செலவிடுவதால், அவர்கள் அதில் ஆழமாக ஈர்க்கப்பட்டு உள்ளனர். இதன் விளைவாக அவர்கள் தமிழினை ஆங்கில மொழியுடன் கலந்து பேசும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், அங்கு பண்டிகைகள் கொண்டாடப்படும் விதமும் முறைகளும் பெரிதாக மாறி விட்டது என்பதை என்னால் உணர முடிந்தது. உதாரணமாக, நம் தமிழர் பண்டிகைகளில் ஒன்றான மாட்டுப்பொங்கல் அன்று நாம் எல்லோரும் விடியற்காலை எழுந்து, குளித்து, நமது மாடுகளை குளிப்பாட்டி, பூசை செய்து, வழிபாடு செய்து வந்தோம். ஆனால், இப்போது பெரியோர்கள் சொல்லித்தான் இன்றைய இளைஞர்கள் இதனை பொருட்படுத்துகின்றனர். முந்திய காலங்களில் ஜல்லிக்கட்டு என்று சொன்னாலே இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பார்கள். இன்றைய காலகட்டத்தில் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் எதிர்காலத்தில் தமிழர்களின் அடையாளத்தில் ஒன்றாக இருக்கும் விளையாட்டுக்கள் அழிந்து போவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவர்கள்மேல் மேற்கத்தைய நாகரீகத்தின் ஆதிக்கம் இருந்தாலும், அவர்கள் தொழில்நுட்பத்துறையில் வளர்ந்து வருகின்றனர். இதனால் வருங்கால சந்ததியினருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்ய முடியும். மேலும் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும்; பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்; கல்வி மேம்படும்; வைத்தியத்துறையின் வளர்ச்சியும்



உயரும். அந்த வகையில் அரசாங்கத்துக்கு நன்றிகளை தெரிவிக்கலாம்.

தொழில்நுட்பங்களை சரியாக பயன்படுத்தி, நமது இளைஞர்களும் அடுத்துவரும் தலைமுறைகளும்தான் நமது கலாசாரங்கள், அடையாளங்கள், நம்பிக்கைகள், மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை காப்பற்றி வர வேண்டும். இந்த வகையில்தான் தமிழ் பொக்கிஷங்களை பாதுகாக்க முடியும்.


தர்ஷினி நீயும் அவுஸ்திரேலியாவில் இருக்கிறாய். உன்னால் இப்போது நமது பூர்வீக கிராமத்திற்கு செல்ல முடியாது என்று எனக்கு தெரியும். உடல் நிலை சரியில்லாமல் உனது அம்மா இருப்பதையும் அறிவேன். இருந்தாலும் நீ அவுஸ்திரேலியாவில் இருக்கும் தமிழ்க் கதிர் பத்திரிகை நிலையத்தளத்தில் வேலை செய்கிறாய் என அறிவேன். அதனால், உன்னால் முடிந்தால் அவுஸ்திரேலியாவில் இருக்கும் நமது தமிழ் இளைஞர்களுக்குத் தமிழின் பெருமைகளையும், எப்படி இலங்கை மாறி வருகின்றது என்பதையும் பற்றிய விழிப்புணர்வை நீ ஏற்படுத்தவேண்டும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால்தான் நமது அடையாளமெனும் பொக்கிஷத்தைக் காப்பாற்ற முடியும். தர்சினி, நீ இதனை படித்த பின்னர் எனக்கு நீ விடுக்க இருக்கும் பதிலை மின்னஞ்சல் மூலம் எழுதி அனுப்பு. உனது பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

**இப்படிக்கு,**
**உன் அருமை தோழி,**
**கேமா கிருஷ்ணா.**

**ஆக்கம்: நிருபா சிவகோபாலன்**
**( ஆண்டு 12 )**





# முதியோருக்கு எது சிறந்தது?

**தம்மைத் தாமே பராமரிக்க இயலாத முதியோர்களை, பிள்ளைகள் சொந்த வீட்டில் வைத்து பராமரிப்பது சிறந்ததா? அல்லது முதியோர் இல்லங்களில் சேர்த்து தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு பராமரிப்பது சிறந்ததா?**

***ஆஸ்திரேலிய சமூகத்தில் ஆறில் ஒருவர் 65 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கிறார்கள். இத்தனை முதியோர்கள் கொண்ட நம் நாட்டில், தனித்து இயங்க முடியாத முதியவர்களை வீட்டில் பராமரிப்பதா? அல்லது தேர்ச்சி பெற்றவர்களுடன் முதியோர் இல்லத்தில் சேர்ப்பதா? என்பது பலருக்கு இருக்கும் கேள்வி. இவ்விரு வழிகளையும் இக்கட்டுரையில் மதிப்பீடு செய்வோம்.***

***தமிழர்கள் பெற்றோர்களை கண்கண்ட தெய்வங்களாக மதித்து அவர்களை பேணிப் பராமரிப்பதைத் தம் தலையாய கடமையாக கருதுபவர்கள். பிறப்பில் இருந்து நம்மை வளர்த்த பெற்றோர்களை அவர்களின் இறுதி காலம் வரை மகிழ்ச்சியாகவும் கவனமாகவும் வைத்திருப்பது பிள்ளைகளாகிய எமது கடமை ஆகும். நாம் வீட்டில் வைத்து அவர்களைப் பராமரிக்கும் போது அவர்கள்***

குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழலாம் என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால் அவர்களுடைய பொருளாதார நிலைக்கு ஏற்ப குடும்பத்தில் இரு பெற்றோர்களும் (கணவனும் மனைவியும்) வேலைக்குச் செல்ல வேண்டிய சூழல் உள்ளது.

பேரப்பிள்ளைகள் பாடசாலை செல்லும் போதும் பிள்ளைகள் வேலைக்குச் செல்லும் போதும் முதியவர்கள் வீட்டில் தனிமையில் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் 'ரோசாப்பூ' போல செழுமையாக இருந்த முதியவர்கள் இப்பொழுது 'வாடிய பூ'போல மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர்.

அப்படிப் பார்க்கும்போது வீட்டில் வைத்து பராமரிப்பது உண்மையாகவே அவர்களுக்குச் சிறந்ததா? என்ற கேள்வி எழுகிறது. மேலும் வீட்டில் தனியாக இருக்கும் போது தானாக இயங்க முடியாது என்றால் முதியவர்களின் அவசர தேவைகளுக்கு யாரும் அருகில் இருக்க மாட்டார்கள். இதனால் தானாக இயங்க முடியாத முதியவர்களை வீட்டில் வைத்திருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பானது அல்ல என்பது உறுதியாகிறது.

அவர்களின் தனிமையைத் தீர்ப்பதற்கும் அவசர தேவைகளுக்கு உதவுவதற்கும் ஒரு முதியோர் பராமரிப்பாளரை வீட்டில் நியமிக்கலாம். ஆனால் இது மிகவும் செலவு மிக்க தீர்வு. பராமரிப்பாளரின் கூலி, மருத்துவ பொருட்கள், பொருத்தமான தளபாடம் போன்றவற்றை வாங்குவதற்கு எண்ண முடியாத அளவிற்கு பணம் தேவைப்படுகிறது. வசதியான பிள்ளைகள் இவற்றை செய்யலாம், ஆனால் சாதாரண குடும்பத்திற்கு, தானாக இயங்க முடியாத நிலையில் உள்ள தம் பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதே பொருத்தமானது. ஓரளவு குறைந்த செலவில் 24 மணித்தியாலங்களும் தேர்ச்சி பெற்றவர்களின் பராமரிப்பில்



முதியோர் இல்லங்களில் இருப்பதே தனி யாங்க இயங்க முடியாத முதியோர்களுக்கு பொருத்தமானது.

இது தம் பிள்ளைகளுடன் புலம்பெயர்ந்து வாழாது, தாய்நாட்டில் உள்ள பெற்றோருக்கும் பொருத்தமான தீர்வு ஆகும்.

ஆனால் நாம் முதியோரை, முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டோம் என்று கூறி அவர்களை மறந்து விடக்கூடாது. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பதை நினைவில் கொண்டு அவர்கள் மேல் கவனமும் அக்கறையும் எப்போதும் இருக்க வேண்டும். பிள்ளைகளின் முகங்களையும் பேரப்பிள்ளைகளின் முகங்களையும் பார்க்கும்போது முதியோர்களுக்கு பேரின்பம் கிடைக்கிறது. வாரத்தில் ஒருமுறையாவது அவர்களை முதியோர் இல்லங்களில் சென்று பார்த்து சுகம் விசாரித்து, அவர்களுடன் கதைத்து, நேரம் செலவிடுவது சாலச் சிறந்தது. இது அவர்களின் மன நலனை சிறப்பிக்க பாதுகாக்க உதவும்.

முதியோர்களுடன் நேரம் கழிப்பதால் அவர்களின் அனுபவங்களைப் பற்றி அறிந்து கொள்ள இளம் சந்ததியினருக்கு வாய்ப்பு கிடைக்கிறது. முதியவர்கள் எங்கள் சொத்துக்கள் என்று உணர்ந்து, அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பது நமது கடமை ஆகும்.

சுருங்கக் கூறின் தானாக இயங்க முடியாத முதியவர்களுக்கு 24 மணித்தியாலங்களும் நன்றாக கவனிப்பும் தரமான பராமரிப்பும் தேவைப்படுகிறது. வீட்டில் அவர்களுக்காகத் தனிப் பராமரிப்பாளர்களை வைத்திருப்பதற்கு வசதி இல்லாவிடில், தேர்ச்சி பெற்றவர்களுடன் முதியோர் இல்லத்தில் சேர்ப்பதுதான் அவர்களின் சுகத்திற்கு சிறந்தது. 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்று போற்றப்படும் நம் பெற்றோர்களை மகிழ்வாகவும் சுகமாகவும்பராமரிப்போமாக!

**ஆக்கம்: சிவசொரூபினி சிவகுமார்**
**(ஆண்டு 12)**



# தமிழ்க் கதிர்

**ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தினால் வெளியிடப்படும்**

**மாணவர் சஞ்சிகை கடந்த மின்னிதழை பார்வையிட ஸ்கேன் செய்யுங்கள்**


தமிழ்க் கதிர்